# குறும்புக்கார குரங்குக் குட்டி



தமிழாக்கம்

திக்குவல்லை கமால்

மெடில்டா அதிகாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறும்புக்காரக் குரங்குக் குட்டி



சிங்கள மூலம்
டப்ளியு. டீ. மெடில்டா அதிகாரம்

தமிழில்
திக்குவல்லை கமால்

படங்கள்
அனில் சுஸன் த சில்வா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறும்புக்காரக் குரங்குக் குட்டி | Kurumbukkara Kurangu Kutti


டப்ளியு. டீ. மெடில்டா அதிகாரம் | © W. D. Metilda Adikaram



முதற் பதிப்பு 2009 **First Print**

**ISBN: 978-955-1848-28-6**

தமிழில்: **Translated by:**
திக்குவல்லை கமால் | Dickwelle Kamal

கணினிப் பதிவு: **Type Setting:**
சோ. சாந்தகுமாரி | S. Santhakumary

அச்சகம்: **Printed by:**
ஜயன் பிரின்ட் கிரஃபிக்ஸ் | Jayan Print Graphics
52/-A/1, கலஹிடியாவ | 52-A/1, Galahitiyawa
கணேமுல்ல | Ganemulla.

வெளியீடு: **Publication:**
தோதென்ன வெளியீடு | Thothanna Publication
உஸ்வெவ வீதி | Uswewa Road,
ஆனமடுவ | Anamaduwa
இலங்கை | Sri Lanka.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறும்புக்காரக் குரங்குக் குட்டி




அந்தக் குறும்புக்காரக் குரங்குக் குட்டி யாரைக் கண்டாலும் விடுவதில்லை. ஏதாவதொரு குறும்பு செய்யும். அதன் பெயர் பெட. காட்டிலே மிகப் பெரிய மரமொன்றைத் தனது வாசஸ்தலமாக மாற்றிக் கொண்டிருந்தது. அந்த மரத்திலிருந்து தொங்கும் கொடிகளைப் பற்றியபடி எப்பொழுதும் ஊஞ்சலாடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது மஞ்சள் நிறத் தொப்பி அணிந்தபடி ஒரு மனிதன் அந்த மரத்தடியால் சென்றான். அங்குமிங்கும் பாய்ந்தபடி நின்ற குரங்குக்குட்டி அந்த மனிதனைக் கண்டது. குரங்குக்குட்டிக்கு அந்த தொப்பியின் மீது ஆசை யேற்பட்டது. அந்த மனிதனுக்கும் அது விளங்கியது. அவன் தொப்பியைக் கழற்றி மரத்தடியில் வைத்துவிட்டு அப்பால் சென்றான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெடீ அவசரமாக மரத்திலிருந்து இறங்கியது. தொப்பியை எடுத்து தலையில் போட்டுக் கொண்டது. என்ன செய்வது? அதன் தலையோ மிகவும் சிறியது. ஆனால் தொப்பியோ மிகவும் பெரியது. அதனால் பெடீயின் தலை முற்றாக மறைந்துவிட்டது. அதற்கு பாதை தெரியவில்லை. அங்குமிங்குமாக ஆடியாடி நின்றது.

அப்பொழுது மறைந்து நின்ற அந்த மனிதன் வந்தான். பெடீயைப் பிடித்து பையிலே போட்டுக் கொண்டான். பின்னர் அவன் வள்ளமொன்றில் ஏறினான்.

சிறிது நேரத்தில் குரங்குக்குட்டி பையிலிருந்து வெளியே வந்தது. இப்பொழுது வள்ளம் நடுக்கடலில் சென்றது. குரங்குக்குட்டி எல்லாப் பக்கமும் பார்த்தது. சுற்றிவரக் கடல். தூர வானிலே பறவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறகடித்தன. அவற்றைப் பிடிக்க பெடீ நினைத்ததுதான் தாமதம் அப்படியே கடலுக்குள் விழுந்துவிட்டது. குரங்குக்குட்டிக்கு நீந்த முடியுமென்று பறவைகள் நினைத்தன. ஆனால் அதனால் நீந்த முடியவில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளக்காரன் உடனடியாகப் பெடீயைப் பிடித்துக் கொண்டான். அது மிகவும் நனைந்து பயந்து கிடந்தது. அதன் பிறகு அது பறவைகள் பக்கம் பார்க்கவேயில்லை. மெல்ல மெல்ல வள்ளம் கரையை நெருங்கியது. அந்த மனிதன் பெடீயைப் பிடித்தபடியே நகரப் பக்கமாகச் சென்றான்.

எல்லோரும் குரங்குக் குட்டியைப் பார்த்தனர். அந்த மனிதன் அதற்கு சுவையான உணவும் தூங்குவதற்கு கட்டிலும் ஒழுங்கு செய்து கொடுத்தான்.

“நாளை காலையில் உன்னை மிருகக் காட்சிச் சாலைக்கு அழைத்துச் செல்வேன்”- அவன் சொன்னான்.

காலையிலேயே அவன் மிருகக் காட்சிச் சாலை அதிகாரியுடன் தொலைபேசியில் கதைத்தான். பெடீ அதனை அவதானித்துக் கொண்டிருந்தது. அந்த மனிதன் சென்ற பின் அது அந்த மேசைக்கு ஏறியது. இலக்கங்களைச் சுழற்ற ஆரம்பித்தது. ஒலித்ததோ பொலிஸ் நிலையத் தொலைபேசி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஹலோ....... ஹலோ யார் கதைக்கிறீர்கள்?” - பொலிஸ் நிலையத் தலைவர் கேட்டார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் கிடைக்கவில்லை. பதிலாக புது விதமான சத்தமொன்று எழுந்தது. எங்கிருந்து இந்த அழைப்புக் கிடைத்ததென்று நிலைய அதிபர் தேடிப் பார்த்தார்.

இலக்கம் 4, பூந்தோட்ட வீதியைத் தேடிக் கொண்டு பொலீஸார் சென்றனர். வீட்டுக் கதவு மூடியிருந்தது. எவரையுமே காணவில்லை. வீட்டினுள்ளே ஏதோ பிரச்சினையென்று நினைத்தார்கள். பொலீஸார் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே பாய்ந்தனர்.

குரங்குக்குட்டி குழப்பமடைந்தது. தப்பியோட முடியவில்லை. தொலைபேசி வயரில் சிக்கிக் கொண்டது. பொலீஸ்காரன் பாய்ந்து பிடித்துக் கொண்டான். இனியென்ன....? பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர். தவறான வேலை செய்தமைக்காகக் குரங்குக் குட்டியை சிறையினுள்ளே தள்ளினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“வீட்டுச் சொந்தக்காரன் இல்லாத நேரத்தில், அந்த வீட்டுச் சாமான் சட்டிகளை கண்டபடி இழுப்பது தவறான செயல்”- பொலீஸ்காரன் பெடீயைப் பார்த்துச் சொன்னான்.

ஆனால் பெடீக்கு எதுவுமே விளங்கவில்லை.

இப்பொழுது பெடீ சிறைக் கூட்டினுள்ளே இருந்தபடி அங்குமிங்கும் பார்த்தது. சிறிய யன்னலொன்று அதன் கண்ணில் பட்டது. அது ஒரேயடியாக யன்னலுக்குப் பாய்ந்தது. யன்னல் கதவுக்குக் கொழுக்கி போடப்பட்டிருந்தது. அதனருகே கூரை வரை செல்லும் குழாயொன்று சுவரில் பொருத்தப்பட்டிருந்தது. அது அக் குழாயைப் பிடித்துப் பிடித்து மேலே சென்றது.

இந்தச் சத்தத்தைக் கேட்டு காவல்காரன் கதவைத் திறந்தான். இதுதான் வாய்ப்பென்று குரங்குக் குட்டி காவல்காரனின் தலைக்கு மேலால் வெளியே பாய்ந்தது. காவல்காரன் சத்தமிட்டான். எல்லோரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓடிவந்தார்கள். முற்றத்திற்கு வந்துவிட்ட பெட திரும்பிப் பார்க்காமலேயே ஓடியது. அங்கே தெரிந்த தொலைபேசித் தூண் ஒன்றின் மேலே ஏறியது.தொலைத் தொடர்புக் கம்பிகளில் தொங்கி ஊஞ்சலாடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்திருந்த எல்லோரையும் சிரிப்பூட்டும் குறும்பு செய்தபடி கம்பிவழியே அசைந்தாடியது. யாருக்குமே பெடீயைப் பிடிக்க முடியவில்லை.

இப்படியிருக்கும் போது பாதையில் சென்று கொண்டிருந்த பலூன்காரனைக் கண்டது. இதற்கு முன்பு என்றுமே காணாத பல்வேறு நிறமான பலூன்கள். மிகுந்த ஆசையோடு பார்த்துக்கொண்டிருந்தது.

'நகரத்தில் எவ்வளவு அழகான விஷயங்கள் இருக்கின்றன'. அது சிந்தித்தது.

பலூன் காரனுக்கு ஏதாவதொரு குறும்பு செய்ய வேண்டும் போலிருந்தது.

ஒரேயடியாக பலூன்காரனின் கழுத்துக்குப் பாய்ந்தது. அவன் பயந்துபோனான். பலூன்கள் மேலே செல்ல ஆரம்பித்தன. அதைப் பிடித்தபடி பெடீயும் மேலே மேலே சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பரசூட் ஒன்றில் செல்வது போல் குரங்குக்குட்டி மிக உயரத்தில் மிதந்தது. கீழே தெரிந்த நிலத்தில் வீடுகள் சிறிதாகக் காணப்பட்டன. இந்தப் புதுமைகளை எல்லாம் அவதானித்தபடி குரங்குக்குட்டி இன்னும் மேலே சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைநடுவில் பலூன்கள் வெடிக்கத் தொடங்கின. "பொப்....! பொப்....! ப்ளாப்......! பொப்....! ப்ளாப்!" என்று ஒவ்வொன்றாக வெடித்தன. கூடவே குரங்குக் குட்டி கீழ்நோக்கி வந்தது. வீதியில் சென்றுகொண்டிருந்தவர்கள், வாகனங்களை நிறுத்தி விட்டு வேடிக்கை பார்த்தனர். மெல்ல





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்ல வீதிக்குறிப்புப் பலகையில் குரங்குக்குட்டி வந்துநின்றது. பலகையின் உச்சியில் நின்றபடி சுற்று வட்டத்தை பார்த்தது. எல்லோரும் வியப்போடு தன்னையே பார்த்துக்கொண்டிருப்பதை பெடீ கவனித்தது.

குரங்குக் குட்டி தலையைச் சொறிந்தபடி அவர்களுக்கு கூத்துக்காட்ட தொடங்கியது. தமது பயணங்களை மறந்த மக்கள் வாய்விட்டுச் சிரித்தனர்.

"மிகவும் புதுமையான குரங்குக்குட்டி அல்லவா?". தங்களுக்குள் கதைத்துக்கொண்டனர்.

"பெடீ பெடீ இங்கே வா"

யாருடைய சத்தம் இது? மஞ்சள் நிறத் தொப்பி அணிந்திருந்த மனிதன் அந்த சமிக்ஞைப் பலகை அருகே வந்தான்.

"பெடீ என்னுடைய கைக்கு இறங்கு. உன்னை நான் தேடாத இடமேயில்லை"

பெடீ மெல்ல அவனுடைய கைக்குப் பாய்ந்தது.

"நீ சரியான குறும்புக்காரன்தான். மிருகக்காட்சி சாலைக் குத்தான் நீ பொருத்தம்". அந்த மனிதன் சொன்னான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெடீயை இப்பொழுது மிருகக் காட்சி சாலையில்தான் காணமுடியும். வந்துபோகும் அனைவருடனும் குறும்பு செய்தபடி மிகுந்த மகிழ்ச்சியோடு காலத்தை கடத்துகிறது.

இப்பொழுது பெடீக்கு நண்பர்கள் ஏராளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறும்புக்கார குரங்குக் குட்டி

## மெடில்டா அதிகாரம்

தமிழாக்கம்
**திக்குவல்லை கமால்**



தோதென்ன வெளியீடு
உஸ்வெவ வீதி, ஆனமடுவ.
032-2263446

ISBN-978-955-1848-28-6

Rs.100/=

TP-48-1-2006-3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org